**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**I.P.No.64/2022**

**வழக்கு சாட்சி PW.2**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராசப்பன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பழனியப்பகவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : புதுக்கோட்டை | வயது | : சுமார் 80 |
| தாலுக்கா | : வேடசந்தூர் | நாள் | : 16.10.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**2வது எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை :**

எனக்கு 80 வயதாகிறது. நான் வேடசந்தூர் வட்டம், புளியமரத்துகோட்டை, தோப்புபட்டியில் வசித்து வருவதற்கான ஆதார் அட்டையை நீதிமன்றத்தில் சான்றாவனமாக முன்னிலைப்படுத்தவில்லை என்றால் ? ஆதார் அட்டை உள்ளது. நான் தேவையென்றால் ஆஜர்படுத்த தயாராக உள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை கிடைக்கப்பெற்றதா என்றால் ? அழைப்பாணை கிடைக்கப்பெறவில்லை. இவ்வழக்கின் மனுதாரர் அம்சவள்ளி இவ்வழக்கில் என்னை சாட்சியம் அளிக்க கேட்டதால் நான் சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளேன் என்றால் ? சரியல்ல. எனக்கும் அம்சவள்ளிக்கும் எவ்வளவு ஆண்டுகாலம் பழக்கம் என்றால் ? சுமார் 20 ஆண்டுகாலமாக பழக்கம். எனக்கு சகாயம் என்பவர் எத்தனை ஆண்டுகாலமாக பழக்கம் என்றால் ? சகாயம் என்பவர் அம்சவள்ளி என்பவருக்கு பழக்கம். அதன் அடிப்படையில் தான் எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் என்ன பரிகாரம் கோரி அம்சவள்ளி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் ? தெரியும். புரோநோட்டின் அடிப்படையில் சகாயம் என்பவரிடமிருந்து தொகை வசூல் செய்ய வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். சகாயம்

ஒருவர் மீதுதான் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ? ரேணுகாதேவி என்பவர் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். ரேணுகாதேவி என்பவர் மீது என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ? பணம் வசூல் செய்ய வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். 2-ம் எதிர்மனுதாரர் ரேணுகாதேவி நல்லெண்ணத்தின் அடிப்படையில் 1வது எதிர்மனுதாரரிடமிருந்து கிரையம் பெற்ற நபர் என்றால் ? சகாயம் என்பவர் ரேணுகாதேவி என்பவரிடம் சொத்தினை விற்பனை செய்துவிட்டு பணம் வாங்கியுள்ளதால் அம்சவள்ளி வழக்கு போட்டுள்ளார். எந்த தேதியில் அம்சவள்ளி என்பவரிடம் இருந்து சகாயம் கடன் வாங்கினார் என்றால் ? 19.01.2020ம் தேதி ஆகும். 19.01.2020ம் தேதிய கடனுறதிசீட்டிற்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றாலும், கடனுறுதிசீட்டில் சாட்சியாக இருந்த காரணத்தினால் நான் இந்த மனுவில் சாட்சியம் சொல்வதற்கு தடைபட்டுள்ளேன் என்றால் ? சரியல்ல. எனக்கு இந்த மனுவின் எந்த விபரமும் தெரியாது என்றும், நான் கடனுறுதிசீட்டின் பேரிலாக தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ? சரியல்ல. நான் முன்னிலைப்படுத்தியுள்ள சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றால்? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.10.16 17:32:08 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்